முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

09.10.2021, சனிக்கிழமை

1. பிரம்மத்தை கண்ட அரங்கனே
பிரணவ சூட்சும தேசிகனே
வரம்பெற்று கலியிடரை வெல்ல
வந்தநல் தருமனே குருராசனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ தரிவை திங்கள்
வரமென மூவேழீர் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள், 09.10.2021 சனிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை பிங்களமுனிவர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதந்து உலகோரை மீட்க
அவதாரம் புரிந்த அரங்க ஞானி
4. ஞானியரின் ஞான வழிதனை
நம்பி வந்து உலகமக்கள்
ஞானிகள் பூசை செய்து வர
நல்சிந்தை அருளும் தயவை
5. தயவை தருமம் செய்து பெருக்கி
தனித்துவம் தனை வளர்த்திட
நேயம் வழி மக்கள் அனைவரும்
நிலைத்தன்மை கண்டுவிடவே
6. கண்டுவிட மக்களை வருத்தும்
கருமவினை வழி தாக்கங்கள்
கண்டுத் தொடரா விலகி நின்று
காப்பான மாற்றங்கள் பெருகும்
7. பெருகவே மக்களை சிதைக்கும்
பேராசை குணங்கள் விலகி
தரும குணமும் போதுமென்கின்ற
தன்னடக்கமும் வளர்ந்து நன்கு
8. வளர்ந்துமே எல்லா மக்களும்
வளர்ச்சி காணுகின்ற பாதையாக
தளர்விலா ஞானிகள் வந்த
தயவான அரங்கன் சன்மார்க்கம்

9. சன்மார்க்கம் தனில் சரணடைந்து
சடாட்சரன் வழிபாடு கூட்டி
நன்மைதரும் உபாயம் ஆக
ஞானிவாழும் பிரணவக் குடிலின்

10. குடிலின் தொடர்பை கொண்டு
குறையிலா திங்கள் தோறும் ஆசி
நாடியே உலகமக்களெல்லாம்
ஞானதேசிகன் கரம்பட அருளும்

11. அருளும் ஆறுமுகனார் ஆசி தீட்சை
அடைந்து ஞான வாழ்வு தொடர
அருளும் பொருளும் பெருகி இனிதே
ஆபத்தில்லா பெருவாழ்வு காண்பர்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—